திரு. ஏ. சுப்பிரமணியம் : இதுபற்றிய விசாரணை நடந்திருக்கிறது. அதிகாரிகள் விசாரித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன அறிக்கை தந்தார்கள், குற்றச்சாட்டுகளைப் பற்றி என்ன கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : சிங்காநல்லூர் நகராட்சி மன்றத் தலைவர் மீது குற்றச்சாட்டுகள் கொண்ட புகார் மனு ஒன்று அந்நகராட்சி மன்ற 14 உறுப்பினர்களால் கையெழுத்திடப் பட்டு 19-9-1972 இல் அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் புகார் மனு மீது நகராட்சி மன்ற இயக்குநர் அவர்களின் விரிவான அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி மன்ற இயக்குநர் அவர்கள் தனது கூட்டு இயக்குநரை சிங்காநல்லூருக்கு அனுப்பி குற்றச்சாட்டுகளை நன்கு ஆராய்ந்து, நேர்முக விசாரணை நடத்தி தனது அறிக்கையினை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். குற்றச்சாட்டுகளும், அதன் மீதான அறிக்கையும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அரசுக்குப் புகார் அனுப்பி வெகு நாட்களாகிவிட்டன. அரசின் முடிவு விரைவில் அறிவிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னும் ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும்.

பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப் பட்டரை

*66 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப்பட்டரையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் பிரிவிற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தச்சுப்பட்டரை ஓராண்டாக நட்டத்தில் நடக்கிறது. இதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப்பட்டரை நட்டத்தில் வேலை செய்கிறது. இதுபோன்ற பட்டறைகளின் தொழில் நுட்ப நிர்வாகக் கட்டுப்பாட்டை கதர் வாரியத்தின் கீழ் கொண்டுவரவும் அப்பட்டறைகளின் கண் காணிப்பு ஊராட்சி ஒன்றியங்களிடமே இருந்து வரவேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

Kotturpuram Housing Scheme

* 67 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Housing and Urban Development Corporation, New Delhi, have undertaken to finance the Kotturpuram project of the State Housing Board; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) Housing and Urban Development Corporation Limited has sanctioned a sum of Rs. 195 lakhs. The HUDCO has so far released Rs. 39 lakhs for the Scheme. Further amounts will be released every quarter in the course of completion of the scheme.

கோவையில் குடிசை மாற்றுப் பணிகள்

* 68 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை மாநகரத்தில் மட்டுமே தற்சமயம் குடிசை மாற்று வாரியம் பணிபுரிந்து வருகின்றது. வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. கோவைப் புதூர் பகுதியிலும் கோவை நகர வின்சென்ட் சாலைப் பகுதியிலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.